# புள்ளடியின் பலம்

தொகுப்பு 2 இதழ் 3 தேர்தல் ஆணைக்குழு செப்தெம்பர் - திசெம்பர் 2018


## தொகுப்பாளர் குறிப்பு


தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடொன்றாகிய புள்ளடியின் பலம் என்னும் இச் செய்திச் சஞ்சிகை, ஆணைக்குழுவின் தரப்பினர் உட்பட சிவில் அமைப்புக்கள், அறிஞர்கள், மாணவர் அமைப்புக்கள் மற்றும் பிரசைகள் ஆகியோரிடையே பிரபல்யம் பெற்றுள்ள மிகச் சிறந்த சஞ்சிகையாகத் திகழ்கின்றதென்பது எங்களுக்குக் கிடைக்கப் பெறுகின்ற பதிலளிப்புக்கள் மூலம் தெளிவாகின்றது. ஆவணங்கள் பற்றிய கலந்துரையாடல்கள், வரலாற்றுத் தகவல்கள், தற்கால சமூக விடயங்கள் போன்றவை தொடர்பான கட்டுரைகள் பெரும்பாலும் இங்கு உள்ளடக்கப்படுகின்றமையே மேற்குறிப்பிட்டவாறு இச்சஞ்சிகை பிரபல்யமடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

புள்ளடியின் பலம் சஞ்சிகையின் 2 ஆம் தொகுதியின் 3 ஆம் இதழிலும் மேற்குறிப்பிட்ட விடயங்களை உறுதிப்படுத்தும் வகையிலான கட்டுரைகள் தயாரிக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன. இச்சஞ்சிகையில் தேர்தல் ஆணைக்குழுவில் அடிக்கடி கலந்துரையாடப்படுகின்ற விடயமாகிய ஜனநாயகம் பற்றியும், அரசியல் யாப்பில் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றியும், சர்வதேச ரீதியிலான இணக்கப்பாடுகள், சட்ட வலுவாக்கம் ஆகியவை பற்றியும், கடந்த வருடத்தில் தேர்தல் ஆணைக்குழுவும், பெபரல் அமைப்பும் இணைந்து நடாத்திய "சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பின் நான்காம் மாநாடு - கொழும்புப் பிரகடனம்" என்னும் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள், தீர்மானங்கள் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தல் சிக்கல்களுக்கான தீர்வுகளைக் காண்பதில் தேர்தல் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொதுவான சம்பிரதாய ரீதியான நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, புதியதொரு கண்ணோட்டத்துடன் ஜனநாயகத்தின் செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்லும் நோக்குடன், தேர்தல் ஆணைக்குழுவின் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து நடாத்தப்படுகின்ற "தேர்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சர்வதேச தினங்களை" நினைவு கூரும் முகமாக நாடளாவிய ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியும், சர்வதேச தினங்கள் தொடர்பான தகவல்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சிகளின் காரணமாகவே, உலகில் அறிவு உருவாக்கப்படுகின்றது என்பதுடன், நடைமுறையிலுள்ள அறிவு இற்றைப்படுத்தப்படுகின்றது என்பதும், சீராக்கம் செய்யப்படுகின்றதென்பதும் கண்கூடாகத் தெரிந்த விடயமாகும். தேர்தற் துறையில் உள்ள அறிவார்ந்த ஆய்வுகளைப் போஷிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கு" பற்றிய தகவல்கள் இச்சஞ்சிகையின் இறுதிப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழுவின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக ஆரம்பிக்கப்படுகின்ற இக்கருத்தரங்கானது, அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோருக்குக் கிடைக்கப் பெறும் மிகச் சிறந்த சந்தர்ப்பமாக அமைவதுடன், அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக இதனடிப்படையில் வெளியிடப்படும் ஆய்வுப் பிரசுரங்கள் மூலம் அவர்களது ஆய்வியல் வாழ்வுக்கு ஒளியூட்டப்படும் என்பதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் இயக்குநர்களுக்கு தமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக அமையும் எனவும் நாம் நம்புகின்றோம்.

- தொகுப்பாளர்




## சனநாயகமும் அரசியலமைப்பும்

### சனநாயகத்தை இனங்கண்டுகொள்ளல்

சனம் என்பது பொதுமக்கள். நாயகம் என்பது தலைமைத்துவம் அல்லது ஆட்சி. அதாவது சனநாயகம் என்பது மக்கள் ஆட்சி என்பதாகும். ஆங்கில மொழியில் சனநாயகம் என்பதன் நோக்கம் Democracy எனப்படுவது கிரேக்க மொழியில் மக்கள் மற்றும் ஆட்சி ஆகிய இரண்டு சொற்களும் ஒன்றாக இணைந்து உருவாகியுள்ளது.

### அரசியலமைப்பொன்றில் உள்ளடங்க வேண்டிய வெற்றிகரமான சனநாயக முறையொன்றின் இலட்சணங்கள்

- சிறுபான்மையினருக்கு இழப்புக்கள் ஏற்படாத, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் பெரும்பான்மையினரின் ஆட்சி.
- கலந்துரையாடல்களின் மூலம் முடிவுகளை எடுத்தல், எதிர்க்கருத்துக்களை பொறுமையுடன் செவிமடுத்து முடிவுகளுக்கு வருதல்.
- சட்டமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை என வேறுபிரிக்கப்பட்ட சுதந்திர அதிகாரங்கள் காணப்படுதல்.
- அரசியலமைப்பு ஆட்சிக்கு கௌரவமளித்தல்.
- சட்டத்தின் முன் சமமானத்தன்மை.

ஹெரல்ட் லேஸ்கி இதை இன்னும் விரிவுபடுத்தும் வகையில் கீழ்க்காணும் இலட்சணங்களையும் இதில் உட்சேர்க்கின்றார்.

- அரச நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கும் பிரசைக் குழுவினர்கள்.
- நாட்டின் அனைத்து இன பிரசைகளையும் ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் ஒரே விதத்தில் கவனித்தல்.
- அடுத்தவர்களின் கருத்துக்களை மதிக்கும் தன்மை சமூகத்தினரிடம் வழக்கமாக இருத்தல்.
- நாட்டின் ஒருங்கிணைந்த தன்மையை ஏற்படுத்த இயலுமாதல்.

### சனநாயகத்தை ஆட்சிமுறையொன்றாகச் சட்டமாக்கல்

- **மக்கள் அரசுரிமை** – சனநாயகத்தின் அடித்தளம் பொதுமக்களே. இதற்கிணங்க அதிகாரம் மக்களைச் சார்ந்ததாகும். மக்கள் அரசாங்கத்திற்கு அதிகாரத்தை ஒப்படைப்பதுடன் (சட்ட உரிமைகள்) மக்களை புறக்கணிக்கும்போது, அதற்கெதிராக எழுந்திருக்க மக்களால் முடியும்.
- **பிரதிநிதித்துவ சனநாயகம்** – மக்கள் தமது உரிமையை செயலுருப்படுத்துவது பிரதிநிதித்துவ சனநாயக முறையிலாகும். அவர்கள் மக்கள் உரிமைகளின் பொறுப்பாளர்கள். அவர்கள் தமது உரிமைகளை பயன்படுத்துவது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியுள்ளனர்.

### சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள்

சனநாயகத்தின் அடித்தளமான மக்கள் உரிமையை, அவர்கள் வெளிப்படுத்துவது வாக்குரிமையின் மூலமேயாகும். ஆகவே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களின் மூலம் வெளிப்படுவது மக்கள் குரலாகும். மக்களின் எதிர்கால எதிர்பார்ப்புக்களாகும். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை உரிய விதத்தில் குறித்த காலப்பகுதியில் நடாத்தி உரியவாறு பெறுபேறுகளை வெளியிடுவதன் மூலம் சட்டபூர்வமான ஆட்சியொன்று அமையும்.

### அரசியற் கட்சிகள்

சனநாயக அரசாங்கமொன்றெனப்படுவது அரசியற் கட்சி முறையை அடிப்படையாகக் கொண்ட முறையொன்றாகும். அரசியற் கட்சிகளின் மூலம் அரசாங்கத்திற்கும் ஆட்களுக்குமிடையிலான தொடர்புகளை

ஏற்படுத்தல், தேர்தல்களில் போட்டியிடல், மக்கள் கருத்துக்களை முன்வைத்தல், மக்களின் தேவைகளுக்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சியொன்று இருப்பதும் சனநாயக ஆட்சி முறையின் அம்சமொன்றென்பதுடன், இதன் மூலம் அரசாங்கத்தின் முரட்டுத் தன்மையைத் தடுக்கவும் குறைப்பாடுகளை சுட்டிக் காட்டவும் சரியான வழியில் வழிநடாத்தவும் முடியும்.

### இது தவிர்ந்த கீழ்க்காணும் அம்சங்களும் சனநாயக அரசியலமைப்பின் தேவைப்பாடுகளாகும்

- அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய குழுக்களுக்கு/ சிவில் அமைப்புக்களுக்கு இடமளித்தல்.
- சுதந்திர ஊடக முறையொன்று.
- சட்டமுறையான ஆட்சியொன்று
- சட்ட அதிகாரம்.
- நீதித்துறையின் சுயாதீனமும் சுறுசுறுப்புத்தன்மையும்.
- வெளிப்படைத்தன்மை.
- விழுமியங்கள், பழக்கவழக்கங்களை (கலாச்சாரங்களை) கண்ணியப்படுத்தல் மற்றும் ஒழுக்கமான ஆட்சிமுறை.
- சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பங்கம் விளையாதவாறான பெரும்பான்மையினரின் ஆட்சி.
- உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கவனத்தை ஈர்த்தல்.
- சமத்துவம்.

### சனநாயகம் நடைமுறைத்தன்மை

**நேரடியான சனநாயகம்** – இது தொடர்பான சமகால நடைமுறையானது மக்கள் தீர்ப்பேயாகும்.

**மறைமுக சனநாயகம்** – மக்கள் தமது பிரதிநிதிகள் ஊடாக ஆட்சியில் பங்களித்தல். அதாவது பிரதிநிதித்துவ சனநாயகமாகும். இலங்கையில் பிரதிநிதிகள் பங்களிக்கும் இடம் பாராளுமன்றமாகையால் ஒருசிலர் 'பாராளுமன்ற சனநாயகம்' எனவும் குறிப்பிடுகின்றனர்.

**மட்டுப்படுத்தப்பட்ட சனநாயகம்** – இன்று உலகில் அரிதாகக் காணக் கிடைக்கின்றது. இலங்கையிலும் 1931 ஆம் ஆண்டிற்கு முன்னர் இவ்வாறான மட்டுப்படுத்தப்பட்ட சனநாயக முறையொன்று இருந்தது. பெண்களுக்கு, வயோதிபர்களுக்கு, கல்வியறிவு இல்லாதவர்களுக்கு வாக்குரிமை இல்லாமை. வாக்குரிமைக்காக வருமானம், சொத்துக்களின் உரிமை தேவைப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட சனநாயகத்திற்கிணங்க ஒருசில மத்திய கிழக்கு நாடுகளில் இன்றும் பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்கவில்லை.



### சனநாயக ஆட்சிமுறைக்குத் தேவையான வழிகாட்டல்கள்

### மக்கள் இறையாண்மை அல்லது மக்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளல்.

இதற்காக நாடொன்றின் மக்கள் அரசாங்கத்தின் அதிகாரப் போக்குகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். (உ+ம். ரஷ்ய கூட்டாட்சி) யாப்பில் உள்ளடக்கப்பட்ட நேரடி சனநாயக பொறிமுறை அல்லது பிரதிநிதித்துவ தேர்தல் முறைகளை பயன்படுத்திக் கொள்வது அதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையொன்றாகும். யாப்பில் உள்ளடக்கப்பட்ட சர்வஜன வாக்குரிமையை அத்தாட்சிப்படுத்தலும் அங்கு மேற்கொள்ளப்படும்.

**இதன்போது,**
பிராந்திய நிறுவனங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் சபையொன்றை அல்லது நிறைவேற்று அதிகார சபையொன்றைத் தாபித்தல் (ஒருமித்த) இதன்மூலம் தேசிய மட்டத்தில் அதிகாரம் இறுக்கமடைதல்.

### இலங்கை அரசியலமைப்பு

இலங்கை அரசியலமைப்பினுள் சுய ஆட்சிமுறையின் பிரதிநிதித்துவம். அரசியலமைப்பின் 3, 4 ஆம் உறுப்புரைகள் மூலம் மக்கள் இறைமையை உறுதிப்படுத்தி வாக்குரிமை அடிப்படை உரிமையொன்றென ஏற்றுக்கொள்ளல்.

ஒப்பீடு செய்யவும்
- போர்த்துகேயரின் ஆட்சி
- 1815 கண்டி ஒப்பந்தம்

மக்கள் இறைமையை உறுதிப்படுத்துகின்ற உயர்நீதிமன்ற வழங்குத் தீர்ப்புக்கள்
- புலங்குலமே வழக்குத் தீர்ப்பு
- கோல்பேஸ் வழக்குத் தீர்ப்பு

கருணாதிலக்க எதிர தயானந்த திசாநாயக்க, எகொடவெல எதிர தயானந்த திசாநாயக்க வழக்கு

### சட்டவாட்சி

- எழுத்து மூல சட்டங்கள் இலகுவாகப் புரிந்து கொள்ள கூடியதும் மற்றும் இணங்கி செல்லக்கூடியதாகவிருத்தல், சட்டத்தை வலுவூட்டல் மற்றும் நீதியைப் பெற்றுக்கொள்ள வசதி கிடைத்தல்.
- சமூகம், அரசு, அரசியல் மற்றும் பொருளாதார அடிப்படையில் அழிக்கக் கூடிய அரசியல் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக கவனமாக இருப்பதற்கான நியாயமான நீதிமன்ற முறைமையொன்று காணப்படல்.
- அரசியல் யாப்பின் உயர்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் அதற்கு முரணான சட்ட உறுப்புரை மூலம் வலுவிழத்தல்.
- இலங்கை அரசியல் யாப்பு அதற்கு வேறு ஏற்பாடுகள் உள்ளன.
- வழிகாட்டல் மற்றும் கொள்கைகளின் செயல்வலுத்தன்மை.
- அடிப்படை செயற்பாட்டு கோட்பாடுகளை மாற்றுதல், கடின பணியொன்றைச் செய்தல் (பெரும்பான்மை மக்கள் தீர்ப்பு போன்ற)
- சமநிலைத்தன்மையுடன் கூடியதும் மற்றும் நியாயமானதுமான முறைமை மூலம் அரச நிறுவனங்கள் ஒவ்வொன்றும் கண்காணிக்கப்படல்.
- இலங்கை யாப்பு
  - ஜோசப் பெரேரா வழக்கு
  - ரீ. என். ஏ. வழக்கு – என்பன நிறைவேற்று நடவடிக்கைகள மற்றும் நீதித்துறைப் பாதுகாப்பு என்பன தொடர்பாக தெளிவுபடுத்துகின்றது.

சட்டங்களை இயற்றிய பின்னரும் விசாரிக்கும் சாத்தியபாட்டை நீதி மன்றத்திற்கு வழங்குதல்.

### பல்வகைமை தொடர்பான கோட்பாடுகள்

- இனரீதியான மற்றும் சமய ரீதியான வேறுபாடு உள்ளபோது இது மிகவும் முக்கியமானதாகும், ஆளடையாள அடிப்படையில் பிரிவுகளை வலுவூட்டுவதை விட தாழ்த்தி அல்லது வேறுபடுத்திக் காட்டுதல் கொள்கை அடிப்படை நம்பிக்கை வைத்து குழுக்களுக்கிடையில், சமத்துவத்தை பேணுவதற்கு ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு சட்டத்தின் நிலையான பாதுகாப்பு நீதிமன்ற விசாரணை மூலம் வழங்குதல்,
- அதிகார பகிர்வுக்காக பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்தல். (உ+ம்) பொஸ்கியாவினதும் ஹர்சகொவினாவினதும் அரசியல் அமைப்புக்கு அமைய சனாதிபதிப் பதவிக்கு 3 பேர் நியமனம் செய்தல். பொஸ்னிய, சேர்பிய என்றவாறு மாறி மாறி தலைவர் பதவிக்கு நியமனம், துணை சனாதிபதிப் பதவி உருவாக்கம். பாகிஸ்தானில் 10 ஆசனங்கள் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு குறித்தொதுக்கப்படல்.
- கல்வி மற்றும் மொழி உரிமைகளைப் பாதுகாத்தல் அதன் மற்றுமொரு வழிமுறையாக கருதப்படுகின்றது. அதிகாரம் பகிரப்படும் போது அரசியல் அதிகாரத்தை மேவிச் செல்வதற்கு சில பிராந்திய அரசுகள் சுய கட்டுப்பாட்டைக்



பயன்படுத்திய போதும் யாப்பிற்கு அமைய அனைத்து நிறுவனங்களும் பல்வகைமையை மதிப்பது கட்டாயமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு சமத்துவம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, அல்லது சட்ட முடிவுகளுக்கு உட்பட நேரிடும்.

- பல்வகைமை சமூக அபிவிருத்தியின் ஒளியொன்றாக உறுதிப்படுத்தல்.
- பல்வகைமையை ஏற்றுக்கொள்ளல் மற்றும் மதித்தல் அடிப்படை விடயங்களாக அமைதல்.

### சமூக ஆண், பெண் பால் நிலை (GENDER)

யாப்பொன்றில் கட்டாய விடயமொன்றாக ஆண், பெண் சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமைகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். வேறுபாடு காட்டாமையை உள்ளடக்கி பெண்கள் பங்கேற்பை உறுதிப்படுத்துகின்ற ஏற்பாடுகளை உட்சேர்த்தல் சில யாப்புக்களில் மனித உரிமையாக பொது சமத்துவம், பிரசாவுரிமை, மொழி உரிமை அடிப்படையில் உட்சேர்க்கப்படும். (இ.அ.யாப்பு 12(4))

#### (அ) யாப்பு ரீதியான மொழி

★ யாப்பின் மூலம் நபர்களை அறிமுகப்படுத்துவதற்கு அவர் என்ற பொதுப் பெயர்ச் சொல்லை உபயோகப்படுத்தல், யாப்பு பூராகவும் ஆண் மொழி பயன்படுத்தப்படும். (ஆங்கிலத்தில் Making Founding, fathers என பயன்படுத்தப்படும். சிங்களத்தில் ஆரம்ப அங்கத்தவர்கள் என மாத்திரம் பயன்படுத்தப்படும்.)

★ நவீன யாப்புக்களில் அவன் அல்லது அவள் என்பதற்குப் பதிலாக நபர் என்பது கையாளப்படுகின்றது.
(உ+ம். ஹிஜி, ஆபிரிக்கா, சுவிஸ்சர்லாந்து, உகண்டா யாப்புக்கள்)

#### (ஆ) பிரதிநித்துவம்

★ பெண்கள் பங்கேற்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு பங்கு முறையை அறிமுகம் செய்தல்.
உ+ம். நேபாளம் - இடைக்கால யாப்பை வழங்கும் அரசியலமைப்பு சபையில் மூன்றில் ஒரு பகுதி பெண் பிரதிநிதிக்கள் காணப்படல் வேண்டும்

★ ருவண்டா - அரசியலமைப்பு சபையில் 80 ஆசனங்களில் 24 உம், செனட் சபையில் 30% பெண்களுக்கு ஒதுக்கீடு.

★ சில நாடுகளில் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் உட்சேர்த்தல்.
உ+ம். ஆஜன்டினா, இலங்கை பிராந்திய அரசுகளுக்கும். சில நாடுகளில் கட்டாய சதவீதமொன்றும் விதிக்கப்பட்டுள்ளது. சில ஆசிய நாடுகளை எடுத்துக்கொண்டால்,

- இந்தியா 30%
- வங்காளதேசம் 30%
- தென் ஆபிரிக்கா 50%

### அரசியலமைப்பு மற்றும் சமயம்

சமயம் மற்றும் சமூகத்திற்கிடையே ஆழமான தொடர்பு காணப்படுகின்றது. அதனை யாப்பை விருத்தி செய்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அனைத்து சமயத்தவர்களுக்கும் ஐக்கியமாக இருக்க முடியுமான வழிமுறை யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்படும். யாப்பில் சமய ஏற்பாட்டின் மூலம் அந்நாட்டின் வரலாறு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு முறைகள் வெளிப்படுத்தப்படும்.

சில யாப்புக்கள் விஷேட சமயத்திற்கு பெரிதும் நெருக்கமடைய முடியும். யாப்பொன்றில் பெரும்பாலும் சமயம் தொடர்பாக குறிப்பிடப்படும். அல்லது சமயம் தொடர்பாக அமைதியாக முடியும், அரசு மற்றும் சமயத்திற்கிடையில் வேறுபிரிக்கும் கோடொன்று காணப்படும்.

கோஸ்டரிக்கா - ரோமன் கத்தோலிக்க மதம் அரச மதமாகும்.

ஈரான் - அரசாங்கத்தின் செயலாற்றுகை அந்த மதத்தோடு நடாத்தப்படல் வேண்டும்.

ஈராக் - அரச மதத்தை, சட்டமுறைமையின் அடிப்படையாக ஏற்றுக்கொள்ளல்.

இந்தோனேசியா - பல சமயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு சமயம் மற்ற சமயத்தை மேவிச்செல்ல மாட்டாது.

பிரான்ஸ் - எந்தவொரு சமயமும் உள்ளடக்கப்படவில்லை. சட்ட முறையில் சமயங்கள் வேறுபடுத்தப்பட்டுள்ளன. சமய சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதும், அது தனிப்பட்ட விடயமொன்றாக கருதப்படவில்லை.

நோர்வே - லூதரன் கிறிஸ்தவ சமயம் அரச தலைவர் அச்சமயத்தவராக இருத்தல் வேண்டும்.

கிரீஸ், போலாந்து, டென்மார்க், ஸ்வீடன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கிறிஸ்தவ மதத்திற்கு விஷேட இடம் கிடைத்துள்ளது. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் சில மாநிலங்களில் உதா மிசிசிப்பி அரசு, வடகெரொலினா அரசு, டெக்ஷாஸ் அரசுகளில் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவ்வரசுகளில் பதவி வகிப்பதற்கு முடியாது. எவ்வாறிருப்பினும், ஜனநாயகச் சட்டமொன்றில், மத சுதந்திரம் உரிமையொன்றாக அத்தாட்சிப்படுத்தல் அவசியமாகும். இலங்கை சட்டம் - 10 ஆம் உறுப்புரை (கட்டாயப்படுத்தி மதத்திற்கு இணைத்துக் கொள்ளல் தவறாகும்.)

### சர்வதேச சட்டத்துடன் தொடர்புபட்ட கொள்கைகள்

உலக மக்களிடையே தூய்மைத் தன்மையை பெற்றுக் கொள்வதற்கு முதன்மைச் சர்வதேச சட்டமான அடிப்படை மனித உரிமைகள் ஒவ்வொரு யாப்பிலும் பின்பற்றப்படுதல் வேண்டும். அது ஒவ்வொரு யாப்பிலும் வெவ்வேறு விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ஒப்பந்தங்கள் பல உள்ளன. இவ்வொப்பந்தங்கள் அரசுகளால் சுயேச்சையாக ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அவ்வாறு ஏற்றுக்கொள்வதன் மூலம் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஏற்படுகின்றது.

### சர்வதேச ஒப்பந்தங்களை உள்நாட்டு சட்டத்தினுள் செயற்படுத்தல்

கிழக்கு திமோர் - சர்வதேச ஒப்பந்தத்திற்கு அங்கீகாரத்தை அல்லது அங்கீகாரமின்மையை வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து அது அந்நாட்டின் சட்டமாக மாற்றமடையும்.

செக் கூட்டரசாங்கம் - சர்வதேச ஒப்பந்த ஏற்பாடுகள் தேசிய சட்டத்திற்கு முரணானதெனினும், அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஜேர்மன் - சர்வதேச சட்டத்தை உள்நாட்டு சட்டத்தினூடாக உயர்வாக செயற்படுத்த வேண்டுமென, ஒப்பந்தம் தேசிய சட்டமாக கருதப்படுவதோடு, இரண்டிற்கிடையில் முரண்பாடு ஏற்படுமிடத்து இறுதியாக விதிக்கப்பட்ட சட்டம் செயல்வலுப்பெறும்.

### இரட்டை முறைமை (Dualisim)

இம்முறைக்கிணங்க சர்வதேச சட்டத்தை உள்நாட்டு சட்டத்தின் உட்சேர்த்தல் வேண்டும்.
உ+ம் - இலங்கை

- 1994 இன் 22 ஆம் இலக்க யாப்பிற்கு எதிரான சட்டம்
- 2005 அ 34 ஆம் இலக்க வீட்டு வன்முறைச் சட்டம்
- 2006 - ஜெனீவா உடன்பாட்டுச் சட்டம்

சனநாயக இலட்சண அரசியல் யாப்பை உறுதிசெய்வதன் மூலம் அதற்கு சட்ட அதிகாரமும், மக்களுக்கு அச் சனநாயகப் பண்புகள் நலிவுறும் போது இனங்காண்பதற்கும் நிருவாகிகள் அதனை மீறும் போது சவாலுக்குட்படுவதற்கும் சாத்தியம் கிடைக்கின்றது.

**சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா**
பணிப்பாளர் (நீதி)
தேர்தல் ஆணைக்குழு







ASIAN ELECTORAL STAKEHOLDER FORUM IV

ANFREL
Asian Network for Free Elections

# ADVANCING ELECTION TRANSPARENCY AND INTEGRITY: PROMOTING AND DEFENDING DEMOCRACY TOGETHER

AUGUST 27 AND 28, 2018

COLOMBO, SRI LANKA

## சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பின் நான்காம் மாநாடு

சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பின் நான்காவது மாநாடு (Asian Electoral Stakeholder Forum) ஆசிய வலயத் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களின் பங்களிப்புடனும், அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது தலைமையிலும் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் இம்மாநாட்டிற்குப் பங்கேற்புச் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றமை, இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற மிகப் பெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது. இம்மாநாட்டில் 47 நாடுகளைச் சேர்ந்த 250 பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

தேர்தல் செயற்பாடுகளின் சுதந்திரத்தையும், நீதியையும் நிலைநாட்டும் வகையில் அதில் பங்குபற்றும் குறித்த தரப்பினருக்கு வழங்கப்படும் பொறுப்புக்கள் பற்றி இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. மேலும் இம்மாநாட்டில் பங்குபற்றிய ஆசிய வலய நாடுகளின் செயல்முறை அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டதுடன், மிகவும் வெளிப்படைத்தன்மையுள்ள தேர்தல் முறை நடாத்துவதன் முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்குகளும் இடம் பெற்றன.

கலாச்சார ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள நாடுகளில் மேற்கொள்ளப்படும் தேர்தல் செயற்பாடுகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் ஆராயப்பட்டதுடன், அச்சவால்களை வெற்றி கொள்வதற்கு ஒரு நாடாக மற்றும் வலயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இம்மாநாட்டின் பெறுபேறாக Colombo Pledge எனப்படும் உறுதியுரை ஒன்றுக்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆசியக் கண்டத்தினுள் ஜனநாயக ரீதியான தேர்தல் முறையை நிறுவுவதற்காக அனைவரினதும் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான உறுதியுரை தயாரிக்கப்பட்டது. அத்துடன் சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் போது உருவாகும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தேர்தல் தரப்பினர்களின் தொடர்ச்சியான பங்களிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட பாங்கொக் பிரகடனம், 2015 ஆம் ஆண்டில் ஜனநாயகத் தேர்தல் தொடர்பான டிலீ சுட்டி, 2016 ஆம் ஆண்டில் பாலி நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் வெளிப்படைத்தன்மை தொடர்பான இணக்கப்பாடு ஆகிய சர்வதேச செயற்பாடுகளின் தொடர் நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

அத்துடன் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒழுக்கக்கட்டுப்பாட்டைப் பேணும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டுமென இங்கு கலந்துரையாடப்பட்டது. ஏற்றுக் கொள்ளக்கூடியதும், மிக நம்பிக்கையானதுமான தேர்தல் முறையை நடாத்திச் செல்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனத்தில் காணப்படும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஜனநாயகம் என்னும் அனைவரினது அந்நியோன்யமான கலந்துரையாடல் மற்றும் போசணை மூலம் அபிவிருத்தியடைதல் அவசியமென்னும் கோட்பாடுகளை நோக்கிச் செல்வதற்காக குறித்த உறுதியுரை வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தேர்தல் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையான, பிழையற்ற தகவல்களைப் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இம்மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. தேர்தற் காலத்தின் போது மாத்திரமன்றி ஏனைய சந்தர்ப்பங்களிலும் அனைத்துப் பிரஜைகளையும் தெளிவூட்டும் வகையிலான சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் முறை ஒரு சிறப்பம்சமாகும்.

இதன் போது தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் பொறுப்புக்கள் பற்றியும், இதனூடாக ஜனநாயகத்தின் பெறுமதி பாதுகாக்கப்படுவது பற்றியும் எடுத்து விளக்கப்பட்டது.

ஜனநாயகம் மற்றும் வாக்குரிமையைப் பாதுகாப்பதில் மிகவும் உறுதியான சட்டக்கோப்பு ஒன்று இருத்தல் அவசியமானதென அனைவராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், தேர்தல்களுக்கான செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக ஆசிய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் இனங் காணப்பட்டது.

இவை மாத்திரமன்றி அனைவரையும் உள்ளடக்குகின்றதொரு தேர்தல் முறையைத் தயாரிப்பதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான அடிப்படை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வஜன வாக்குரிமை பெற்ற அனைத்துப் பிரஜைகளுக்கும் சுதந்திரமாகத் தமது வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்காக தற்போது அமுலிலுள்ள சட்ட மற்றும் ஏனைய முரண்பாடுகள் களையப்படல் வேண்டும்.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து ஆசிய தேர்தற் செயற்பாட்டாளர்களின் நான்காவது மாநாடு மூலம் ஜனநாயகம் மற்றும் வாக்குரிமை என்பவை பாதுகாக்கப்படுவதற்கான செயற்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது.

**தரணி உபேகா வீரசேகர**
உதவித் தேர்தல்கள் ஆணையாளர்
(சட்டம் மற்றும் விசாரணைகள்)







# தேர்தல் பிணக்குகள்/ முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கான ஒரு முன்னுரை

பிரசைகள் சமூகத்தினுள் பல்லினத் தன்மை மற்றும் பன்மைத்துவம் மட்டுமன்றி சமத்துவமும் காணப்படுவதை மீண்டும் மீண்டும் சாதாரண மக்களுக்கு உணர்த்துவது சனநாயக சூழ்நிலைக்குள் அடிக்கடி நடாத்தப்படுகின்ற தேர்தல்கள் மூலமேயாகும். எவ்வாறாயினும் சனநாயகத்தின் நவீன அத்திவாரமான "Everyone count for one and none for more than one" பிரயோக ரீதியாக உணரப்படுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் தனிநபர் மற்றும் குழு ஆளடையாளங்கள், அதிகார எல்லைகள் மற்றும் நம்பிக்கைகள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் நடாத்தப்பட வேண்டிய தேர்தல் களத்தில் சமத்துவத்திற்கான இணக்கப்பாடுகள் பலத்த சவாலுக்குறப்படுகின்றன. அதற்கமைய நம்பகத் தன்மையான தேர்தல் முடிவுகளைப் (Credible election result) பெற்றுக் கொள்வதற்காக தேர்தல் பிணக்குகளை (Election disputes) உரிய முறையில் முகாமை செய்தல் மற்றும் தீர்த்து வைத்தல் என்பவற்றுக்கான விஷேட கவனம் செலுத்துவது இன்றியமையாததொன்றாகும். பல்லின தன்மைகள் மற்றும் இணக்கப்பாடின்மைகள் ஒன்றுடன் ஒன்று மோதுதல் தேர்தல் காலப்பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாதாதலால், தேர்தல் சார்ந்த பிணக்குகள்/மோதல் தீர்வு தேர்தல் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத முந்திய மற்றும் பிந்திய தேர்தல் பிணக்குகள்/ மோதல்கள் என மொத்த தேர்தல் சக்கரத்திற்கான (cycle electoral) நிரந்தரமானதும் மற்றும் விஷேட இலட்சனங்களுடன் கூடியதுமான அர்ப்பணிப்பும் (Dedicated) பொறிமுறையொன்றினூடாக பொதுவான தரப்படுத்தல் முறைமையொன்றினூடாக (SOPs) மூலம் சட்டரீதியானதாகவும் (Legitimate) மற்றும் கால அட்டவணைக்கேற்பவும் (Timely) நடைபெற வேண்டிய பணியொன்றென 2016 ஆம் ஆண்டில் சார்க் வலய தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களினால் (EMB's) மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட தேர்தல் பிணக்குகள்/ மோதல்கள் முகாமைத்துவம் தொடர்பான காத்மன்ட் பிரகடனத்தில் (Kathmandu Declaration) இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதியில் உலகில் தேர்தல் முறைமைகளில் அதிக பிணக்குகள் 1980 மற்றும் 1990 ஆகிய தசாப்தங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2000 மற்றும் அதன் பின்னரான தசாப்தங்களில் அது தொடர்பாக கணிசமானளவு வீழ்ச்சியொன்று பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், உலகில் சனநாயக தேர்தல் நடாத்தப்படுகின்ற ஏனைய புவியியல் வலயங்களில் தெற்கு ஆசிய வலயம் மிகவும் அதிக தேர்தல் பிணக்குகள்/ மோதல்கள் உள்ள வலயம் என சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த, தேர்தல் சார்ந்த மோதலில் பிரதான பகுதி தேர்தல் சட்டமீறல், வன்முறைச் செயற்பாடுகள் மற்றும் தேர்தல் மோதலை ஊக்குவிக்கும் காரணியாக (Conflict stimulational issues) என சர்வதேச வகைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளது. இலங்கையில் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பொருள் கோடலுக்கு ஏற்ப அவை தேர்தல் தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டமுரணான செயற்பாடுகள் என வகைமீடு செய்யப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது 1663 தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் 42 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் என மொத்தம் 1,705 தேர்தல் முறைபாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு நிலையத்தினால் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேற்படி நிலையத்தினால் முறைப்பாடுகள் பின்வரும் விதத்தில் வகுப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### தேர்தல் வன்முறைச் செயல்கள்

I. அச்சுறுத்தல் விடுத்தல்
II. தாக்குதல்
III. உயிர்ச் சேதம்
IV. சொத்திழப்புகள்
V. துப்பாக்கிச் சூடு நடாத்துதல்
VI. கட்சி அலுவலகங்கள்/ கூட்டங்கள் சோடனைகளுக்கு சேதம் விளைவித்தல் என்பன

### தேர்தல் சட்டங்களை மீறுதல்

I. அரச, பொது ஆதனங்களின் துஷ்பிரயோகம்
II. அரச அலுவலகங்கள், கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற பொது இடங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்
III. அரச உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் ஈடுபடுத்தப்படல்
IV. அரச மற்றும் தனியார் ஊடகங்களின் முறையற்ற பயன்பாடு
V. வாக்காளர்களுக்கு பல்வேறு பிரதி உபகாரங்களை செய்து கொடுத்தல்
VI. சட்ட விரோதமாக சுவரொட்டிகள், அறிவித்தல் பலகைகள், பதாதைகளை விருப்பு இலக்கம் என்பனவற்றை காட்சிப்படுத்தல்
VII. சட்ட முரணான கூட்டங்கள், கோசம் எழுப்புதல்கள், ஊர்வலங்கள் மற்றும் சட்ட விரோத கட்சி அலுவலகங்கள்
VIII. தேர்தல் கால எல்லைக்குள் முறையற்ற







மற்றும் அரசியல் செல்வாக்கு அடிப்படையில் நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் சேவை இடமாற்றங்கள்

IX. நபர்கள் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பு
X. பிரச்சார நடவடிக்கைகளில் செய்யப்படும் தகாத செல்வாக்குகள்
XI. அஞ்சல் வாக்கு தொடர்பான முறைப்பாடுகள்

இலங்கையில் போன்றே ஏனைய பெரும்பாலான தெற்காசிய நாடுகளின் தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் என்பது நீதிமுறைச் (Judicial) அல்லது பொலிஸ் திணைக்களம் (Police Department) மூலம் தீர்க்கப்பட வேண்டிய அல்லது தலையீடு செய்ய வேண்டிய பணியொன்றாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் இலங்கை தேர்தல் முகாமைத்துவத்தினுள் நீதித்துறை சாராத அல்லது பொருத்தமான வேறு தேர்தல் பிணக்குகள்/ மோதல்கள் தீர்வு முறைகள் அதிகமானவை ஏற்கனவே உயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் சில பின்வருமாறு

1. தேசிய தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் விசாரனை நிலையம்
2. தேர்தல் சார்ந்த மனுக்கள், மேன்முறைமீடு, முறைப்பாடுகளைக் கையேற்றல்
3. தேர்தல் சார்ந்த அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வலுவாக்கம் செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்
4. தேர்தல் தவறுகள், தண்டனைகள் மற்றும் சட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கான பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.
5. ஊடக பயன்பாட்டு வழிகாட்டு ஒழுக்கநெறிகள்
6. பொதுமக்களுக்கான தெளிவூட்டல் மற்றும் வாக்காளர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்
7. தேர்தல் கண்காணிப்புகள் மற்றும் பின்னாய்வுக்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டங்கள்
8. ஒழுங்கு விதிகள் (Regulations), வழிகாட்டல்கள் (Guide Lines), ஒழுக்கக் கோவைகள் (Code of Conducts) என்பவற்றைச் செயற்படுத்தும் பிரிவு.
9. தேர்தல் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள்.
10. தேர்தல் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக துரித வலுவாக்கத்திற்காக தயார்படுத்தப்பட்ட தனிமனித அல்லது சிறு குழுக்கள்

கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற கலந்துரையாடல்களின் சாராம்சத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தற் பிணக்குகளை முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றை நிவர்த்தி செய்வதற்குமான இலங்கை மாதிரி ஒன்றுக்கு வழியமைக்கப்பட்டது. “முரண்பாடுகளுக்கான இணக்கப்பாட்டுக்காக“ என்னும் பிரச்சினைகளை உருவாக்குபவர்களை இணங்கச் செய்தல், சட்டத்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட சமத்துவம், நீதிமன்ற செயன்முறையற்ற தேர்தல் பிணக்குகளை நிவர்த்தி செய்யும் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல், சர்வதேச தரங்கள் மற்றும் கற்றறிந்த பாடங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல், தேர்தற் பிணக்கு முகாமைத்துவத்திற்கான விஷேட மூலோபாயங்கள் மற்றும் திறமைகளை இனங்காணல் போன்ற விடயங்கள். குறித்த கலந்துரையாடல்களின் சாராம்சப் பிரேரணைகளாக பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1. தேர்தற் பிணக்குகள்/ முரண்பாட்டு முகாமைத்துவம் செய்தல் (EDR) பிரிவொன்று தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் தாபித்தல்.
2. தேர்தற் பிணக்குகள்/ முரண்பாடுகளைத் தீர்த்தல் போன்ற நடவடிக்கைகளை தேர்தற் காலப்பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது அனைத்து தேர்தற் செயற்பாடுகளையும் அளாவியவாறு பதிலீடு செய்தல்.
3. தேர்தற் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தேர்தற் காலப்பகுதியில் செயற்படுத்தப்படக்கூடிய அதிகாரமுள்ள செயற்குழுவொன்றை உருவாக்குதல்.
4. தேர்தற் பிணக்ககளைத் தீர்க்கும் செயற்பாட்டிற்காக சிறந்த தரத்திலான செயன்முறை ஒன்றைத் தயாரித்தல். (EDR – SOPs)
5. தேர்தற் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு பிரஜைகளின் நேரடிப் பங்களிப்பை அதிகரிக்கும் வண்ணம் அதிகாரமுள்ள பன்முக அரச சார்பான செயன்முறை (Multi – track diplomacy) ஒன்றை அறிமுகப்படுத்துதல்.
6. ஆண், பெண் சமூக நிலைப்பாடு (Gender actrism) மற்றும் இளைஞர் பங்களிப்பு (Youth participation), அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தினை பிணக்குகளைத் தீர்க்கும் கருவியாகப் (EDR tools) பிரயோகித்தல்.
7. தேர்தற் காலப்பகுதியில் தேர்தற் சட்டங்கள் மீறப்படுவதை தவிர்க்கும் வகையில் சட்டங்களை அமுல்படுத்தக்கூடிய ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளை இனங்கண்டு குறித்த நிறுவனங்களின் அலுவலர்களைத் தெளிவூட்டுதலும் சட்டத்தை அமுல்படுத்துதலும். (உதா. வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கா டெலிகொம்.)
8. தேர்தற் சட்ட மீறலைக் குறைப்பதனை ஊக்குவிக்கும் நோக்குடன் தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.
9. தேர்தற் செயற்பாட்டில் நேரடித் தொடர்புகளற்ற அரச நிறுவனங்கள் (கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள்) இனங்காணப்பட்டு தேர்தல் சட்டங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவூட்டல்.
10. தேர்தற் முரண்பாடுகளுக்கான முரண்பாட்டு உணர்ச்சி குறிகாட்டிகளை (Sensitivity indicators) இனங்காணலும் முன் அபாய எச்சரிக்கை முறைமை (Early Warning System) ஒன்றினை நிறுவுதலும்.
11. அறிவு முகாமைத்துவம் (Knowledge Management) மற்றும் மீண்டெழும் பாவனைகள் (Reflective Practices) போன்ற செயன்முறைகள் ஊடாக தொடர்ச்சியான ஆய்வுகளையும், மதிப்பீடுகளையும் மேற்கொள்ளல்.







12. தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் செயற்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்துதலும் நேரடியாக வலுவூட்டலும்
13. இலங்கை தேர்தற் பிணக்குகள் முகாமைத்துவத்திற்கான விசேட விதிமுறைகளை இனங்காணல்.

இவற்றை விட ஒழுங்கு முறைப்படி நிறுவப்பட்டுள்ள முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறையை செயற்படுத்துவதற்காக பிணக்குகள் தீர்க்கும் தகைமைகளைப் பெற்றுள்ள அலுவலர்களின் தேவைப்பாடு மிக முக்கியமானது. இதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் (Election Officials) மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லாதோர் அதாவது தேர்தற் காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் கடமையிலீடுபடுத்தப்படும் அரச மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களைப் பயிற்றுவிக்க வேண்டியுள்ளது. இதன் பிரகாரம் இணக்கப்பாட்டுக் கலந்துரையாடல்கள் (Negotiation), இடைத் தொடர்பாடல்கள் (Mediation), வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் (Fecilitation), முரண்பாட்டுப் பகுபாய்வு (Confilict analysis) போன்ற விசேட தகைமைகள் பற்றி குறித்த அலுவலர்களுக்கு பரந்தளவிலான அறிவை வழங்குதல் வேண்டும்.

இறுதியாக ஒன்றுக்கொன்று முரண்படும் வகையிலான அடையாளங்கள், நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய விசேடமாக உலகில் தற்போதுபாவனையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் மாநாடுகள் போன்ற செயற்பாடுகளை இலங்கை தேர்தற் பிணக்கு முகாமைத்துவம் தொடர்பாகவும் தயாரிப்பதற்கான நிகழ்ச்சிகளை உட்படுத்த முடியுமானால் அது தேர்தற் செயற்பாட்டின் புதியதொரு அத்தியாயமாக விளங்கும்.

**சுரங்க ரணசிங்க**
உதவித் தேர்தல்கள் ஆணையாளர்
(நிருவாகம்)

## International Days Relevant to Electoral Process

30 Jan Wednesday
**School Day of Non-Violence and Peace**

20 Feb Wednesday
**World Day of Social Justice**

21 Feb Thursday
**International Mother Language Day**

8 Mar Friday
**International Women's Day**

21 Mar Thursday
**International Day for the Elimination of Racial Discrimination**

22 Apr
**Monday Earth Day**

3 May Friday
**World Press Freedom Day**

12 May Sunday
**Mother's Day**

15 May Wednesday
**International Day of Families**

1 Jun Saturday
**Voter's Day**

5 Jun Wednesday
**World Environment Day**

16 Jun Sunday
**Father's Day**

23 Jun Sunday
**Public Service Day**

30 Jun Sunday
**World Social Media Day**

30 Jul Tuesday
**International Day of Friendship**

9 Aug Friday
**International Day of the World's Indigenous Peoples**

12 Aug Monday
**International Youth Day**

15 Sep Sunday
**International Day of Democracy**

21 Sep Saturday
**International Day of Peace**

1 Oct Tuesday
**International Day of Older Persons**

1 Oct Tuesday
**World Children's Day**

2 Oct Wednesday
**International Day of Non-Violence**

3 Dec Thursday
**World Disability Day**

10 Dec Monday
**International Anti-Corruption Day**

10 Dec Tuesday
**Human Rights Day**

# பளிங்குச் சுவர்

## சிறுவர் உலகின் பிராத்தனை

நாளைய உலகை கமழச் செய்யும் மலர்களே
தரையில் பொதியும் நிதியங்கள் உமக்குக் கீழேயே
வெற்றிக் கொடி நாட்டும் அனைத்து படைகளும் நீங்களே
இலங்கைத் தாயை எழுச்சியுறச் செயும் வளங்களின் கனவும் நீங்களே

உள்ளோர் அற்றோர் இடைவெளி சமயம் சாதிகள்
அரசியலின் வாரிசுகளாம் பேதங்கள் இன்னபல
நாட்டை அழிக்கும் பீடைகளவற்றை அழித்தொழித்து
அடியெடுத்து வாருங்கள் சிங்க நாதம் ஓங்கி ஒலித்து

அபலைகளுக்கு நீதியை வழங்கத் தயங்காதீர்
முழந்தாளிட்டு அதர்மத்தை வணங்கி மதிக்காதீர்
நாட்டை மொழியை ஏறிமிதிக்கும் பணிகளை நீர் ஆற்றாதீர்
தன்னலத்திற்காக நாட்டிற்கு விலைநீர் பேசாதீர்

கடமைக்கு சிரந்தாழ்த்தி கண்ணியம் அளிக்க வேண்டும்
உரியதை உரியவாறுரிய நேரத்தில் ஆற்ற வேண்டும்
ஆற்ற வேண்டியவற்றை தாமதிப்பதை தவிர்க்க வேண்டும்
திடசங்கற்பத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்

அறிவு நற்பண்புகளை பாடமாய்க கொள்க
கூடாதவற்றினை நல்லவற்றிலிருந்து பிரித்தறிக
ஒழுக்கமின்மை அநீதியை அழித்திடுக
நாளைய தினத்தில் நாட்டின் சுமை தாங்கிடுக


உலகில் உமது குரல் என்றும் ஒலிக்கட்டும்
உரிமைகள் உமக்கு கிடைத்து உரிய இடம் வாய்க்கட்டும்
தடைகள் தகர்த்தெறியப்பட்டு வெற்றிக்கம்பம் நடப்படட்டும்
அன்பு சொரியும் சிறுவர் உலகம் உலகில் மலரட்டும்

**ஹே.மு.தி.தி. ஹேரத்**
செயலாளர்
தேர்தல் ஆணைக்குழு









# Annual Research Symposium 2019

Organized by
Election Commission of Sri Lanka



**Theme: Striving for A Nation that Safeguards Universal Franchise**

## CALL FOR ABSTRACTS

- Abstracts will be collected under the theme of **"Striving for a Nation that Safeguards Universal Franchise".**
- Abstracts can be submitted in English/ Sinhala/ Tamil language.
- One applicant can submit one abstract. Co-authoring is allowed.
- **Common guidelines for the Abstracts**
  - Word limit – Maximum 300 words
  - 5 Key Words in Alphabetical Order
  - Font Size - 12 pt
  - 1.5 Spacing, 1 inch Margin from Left
  - Font style – Times New Roman/ FM Abaya/ Kalaham
  - Reference style – American Psychological Association (APA 6th Edition)
- Forward your abstracts to the email address **arsecsl@elections.gov.lk** along with the duly filled declaration form.
- Selected papers will be published as a journal.

## Important Dates

Deadline for submission of abstracts – 15th of March 2019

Notification of acceptance of abstracts – 22nd of April 2019

Deadline for receiving the research papers – 14th of June 2019

Date of Symposium – 1st of August 2019

**Venue: Colombo Sri Lanka**

REGISTRATION FREE

- For more information visit **www.elections.gov.lk**



ஆலோசனைக் குழு
மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜீவன் எச். ஹூல்
எச். எம். ரீ. ரீ. ஹேரத்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க
ரசிக பீரிஸ்

தொகுப்பு – சன்ன பீ. த. சில்வா
தொகுப்பு உதவி – அமில பிரசாத்
அச்சிடல் ஆலோசனை – ஜகத் சந்திரலால் த சில்வா, இலங்கை முதலீட்டுச் சபை
அச்சுப் பதிப்பு – அரசாங்க அச்சகம்
வெளியீடு – ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு

உங்கள் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு எழுதுங்கள்
தொகுப்பாசிரியர் – புள்ளடியின் பலம்
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை.
(+94)0112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka

இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்களல்ல.